User | Profile | Consortium for Academic and R | Consortium for Academic and R | SearchList

ugccare.unipune.ac.in/Apps1/User/WebA/SearchList

SAVITRIBAI PHULE PUNE UNIVERSITY

Home

UGC

Search

# UGC-CARE List

## UGC-CARE List

You searched for "**2321-984X**". Total Journals : **1**

Search:

| Sr.No. | Journal Title | Publisher | ISSN | E-ISSN | UGC-CARE coverage years | Details |
|---|---|---|---|---|---|---|
| 1 | Modern Thamizh Research- A Quarterly International Multilateral Thamizh Journal (print only) | Raja Publications | 2321-984X | NA | from January-2020 to January- 2022 | Discontinued from Jan. 2022 |

Showing 1 to 1 of 1 entries

Previous 1 Next

Copyright © 2024 Savitribai Phule Pune University. All rights reserved. | Disclaimer

Type here to search

27°C Mostly cloudy ENG 07:09 PM 05-01-2024

சிறப்பிதழ்
**Special Issue**

14-15 பங்குனி 2051
27th & 28th March, 2020

ISSN : 2321 - 984X

*Chief Editor*
Dr. M. Sadik Batcha

*Advisory Editor*
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2020
தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி &
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி, தமிழ்நாடு, இந்தியா

## சுற்றுச்சூழலும் பருவநிலைமாறுபாடும் : தமிழரின் அறிவுசார் மரபுவழிப் பார்வை

## ENVIRONMENT AND CLIMATE CHANGE: AN INSIGHT INTO THE TAMIL CULTURE AND LITERATURE

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issues Editors**

**முனைவர் ப. உதயகணேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி

**முனைவர் ஆறு.சரவணகுமார்**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

39

# Modern Thamizh Research

A Quarterly International Multilateral Thamizh Journal

*Published by*

**Raja Publications, Trichy-23.**


## INFORMATION FOR AUTHORS

Journal of **Modern Thamizh Research** (JMTR) is published Four (Every March, June, eptember & December) times a year. It primarily publishes significant original papers and survey ticles on important advances of Modern Thamizh research in any of the following major areas:

- Classicalism (செவ்வியல்)
- Modernism (நவீனம்)
- Folklorism (நாட்டுப்புறவியல்)
- Archeologism (தொல்லியல்)
- Spritualism (பக்தியியல்)
- Traditioanlism (மரபியல்)
- Socialism (சமூகவியல்)
- Mediaism (ஊடகவியல்)
- Journlism (இதழியல்)
- Translationism (மொழிபெயர்ப்பியல்)
- Comparativism (ஒப்பியல்)
- Educationalism (கல்வியல்)
- Histroism (வரலாற்றியல்)
- Physical Education & Yoga (விளையாட்டு & உடற்பயிற்சி)

### Submission of the Manuscript

1. Manuscripts written in Thamizh or English may be submitted in two copies to the Chief Editor **Dr. M. Sadik Batcha, Associate Professor of Tamil, PG and Research Department of Thamizh, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020, Mobile : 9600535241, Email : ms_batcha@yahoo.co.in**

2. Manuscripts should be prepared according to the following format.
   The first page of the manuscript should contain
   (i) the title
   (ii) the name(s) and institutional affiliation (s) of the author(s).
   (iii) an abstract of not more than 100 words; and
   (iv) a footnote giving the name and present address of the author to whom proofs and reprint order form should be addressed.
   (v) References at the end of the manuscript should be arranged in alphabetical order of the first letter of the surname and styled and punctuated according to the following format.
   [1] author(s) name(s), "Book name", Page, Edition number, Published Year, Book Publisher address.

### Publication of Accepted Papers

The editorial Policy of JMTR is to give a clear reply about the acceptance of all submitted papers, within a period of one month.

### Subscription Rate of JMTR

Libraries, Institutions and other establishments can subscribe for JMTR through publisher : **Raja Publications, 10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India. Mobile : 9600535241 website : rajapublications.com** and in case of any difficulty they should write to the Chief Editor at address given elsewhere.

| Subscription Rates | Years | Printed |
|---|---|---|
| (Year) India INR ₹ | 1 Years Only | 2000 |
| Other Countries INR ₹ | 1 Years Only | 3000 |
| (Life) India ₹ | 10 Years Only | 10,000 |
| Other Countries INR ₹ | 10 Years Only | 20,000 |

# தமிழ் இலக்கியம் காட்டும் நீர்மேலாண்மையும் இன்றைய கால சூழலும்


**முனைவர் பா.காசிவைரவன்**

உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை,

ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்-630 211, சிவகங்கை மாவட்டம்

**முனைவர் போ.மாரிச்சாமி**

உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை, ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்-630 211, சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு




**Abstract**

In all aspects, Tamil race is the pioneer of the world. Their vision of knowledge with technology and their scientific evaluation on water management is the best example for the same. Thirukkural, Aganaanooru, Kondraiventhan and many other old Tamil Literature guide us about water management.

Dam Kallanai built by King Karikala Chozhan thousand years ago is majestic in front of the eye even today. In those days without any of our recent technology, they made it possible. But even with our modern technology, because of our carelessness water management we are marketing water. If this continues, surely the next generation will taunt us. This study is based on water management system in Tamil Literature and today|s Atmosphere.



**Keywords :** planning, organizing, directing, controlling and water management.


கல்லணை



கல்லணை



குளம்



கண்மாய்

**முன்னுரை**

இவ்வுலகின் அனைத்து நிகழ்வுகளிலும் தமிழ் இனம் ஒரு முன்னோடி. அதற்கு ஒரு சிறந்த உதாரணம் நீர் மேலாண்மை பற்றிய அவர்களின் மதிப்பீடும், தொழில் நுட்பம் சார்ந்த அவர்களின் அறிவியல் அறிவின் பார்வையுமே ஆகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கரிகாற்சோழனால் கட்டப்பட்ட கல்லணை இன்றும் நம் கண்முன்னால் கம்பீரமாக உள்ளது. பொதுவாக மேலாண்மை என்னும் சொல் மனித செயல்பாடுகளை வழிப்படுத்துதல் எனக் கூறுகின்றனர். கூன்ஸ் மற்றும் ஓடோனேல் (Koonz and O|Donnel) என்பவர் ஒரு சூழலை உருவாக்கி அதில் அணிகளாக சேர்ந்து பணியாற்றும் மக்கள் திறமையுடன் செய்லபடுவதற்கு ஏற்றதாக மேலாண்மைப் பணி இருக்க வேண்டும் என்கிறார். மேலும் மேரி பார்க்கர் போலேட் (Mary Parker Follett) என்பவர் மக்களின் மூலம் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளும் கலையே மேலாண்மை என்று கூறியுள்ளார். நீர் மேலாண்மைப் பணிகளை இன்றைய நவீன மேலாண்மைப் பணிகளான திட்டமிடல், அமைப்பாற்றல், இயக்குவித்தல், மற்றும் ஒருங்கிணைத்தல் என வகைப்படுத்தப்பட்டு அவற்றுடன் ஒப்பிடுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்

**திட்டமிடல்**

எதைச் செய்ய வேண்டும்? எப்படி, எங்கே செய்ய வேண்டும? யார் செய்ய வேண்டும்? என்கிற முடிவுகளே திட்டமிடுதலைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். சூழலில் கிடைக்கும் வளங்களையும் மனித ஆற்றலையும் ஒருங்கிணைத்து நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் திட்டமிடுதல் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவரும்,

**“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்”** (குறள் 517)

எனக் குறிப்பிடுகிறார்.

திட்டமிடுதல் என்பது எதைச் செய்கிறோம் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து, அதன்படி செயல்படுவதாகும் எதிர்பார்க்கப்பட்ட முடிவினை அடைவதற்கு, செயல்பாட்டினை தீர்மானித்து அதன்படி நடப்பதாகும். தொலைநோக்குப் பார்வையுடன் பண்டைய மக்கள் நீர் மேலாண்மைத் திறனை உலகிற்கு அளித்தனர். மழைக் காலங்களில் நீர் சேமிக்கும் முறைகளையும் அதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்து துல்லியமாக, ‘சிறுதுளி பெரு வெள்ளம்’ என்னும் பழமொழிக்கு ஏற்ப திட்டமிட்டு செயல்முறை படுத்தினர் என்பதை

**என்றாள் வியன் குளம் நிறைய வீசி**
**பெரும் பெயல் பொழிந்து ஏம வைகறை**
**பல்லோர் உவர்ந்த உவகை எல்லாம்**

(அகம் : 42-911)

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது.

‘வான்பொழியும் நீரே உயிர்ப்பு’ என்பதற்கு அடிப்படையாய் அமைவது நீர் மேலாண்மை ஆகும். இதனை வள்ளுவர்

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது** (குறள்: 16)

**வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று** (குறள்: 11)

என்ற குறள்களின் மூலம் விளக்கியுள்ளார். அத்தகைய தமிழ் மக்கள், தொன்றுதொட்டு, மழையை உயிரினும் மேலானதாகப் போற்றியுள்ளனர். மழை நீரை ஏரிகள் குளங்களில் சேமித்து வைப்பதைப் பற்றி இளங்கோவடிகள்,

**இடியுரை பெருமழை எய்தா ஏகப்**
**பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப**
**மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்**

என்ற பாடலடிகளின் மூலம் விளக்கியுள்ளார்.

இதன்வழி மழை நீரைக் குளங்களில் சேகரிக்கும் தொழில்நுட்பத்தை பண்டைய மக்கள் அறிந்திருப்பதை உணரமுடிகிறது

**அமைப்பாற்றல்**

அமைப்பாற்றல் என்பது செயல்பாடுகளைப் பிரித்து ஒருங்கிணைக்கும் செயல்முறையே ஆகும். தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலத்தில், ஒரு நகரத்தின் அமைப்பு என்பது கோயில்களும், அதனைச் சுற்றி குளங்களும், அதனைச் சுற்றி மக்கள் வசிக்கும் மனைகளுமாகப் பிரிக்கப்பட்டு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதிலும் முக்கியமாக பஞ்ச பூதங்களின் ஒன்றாய், இயற்கையின் இதயத்துடிப்பாய்இ உயிரினங்களின் உயிராய், உள்ளது "நீர்" ஆகும். "நீரின்றி அமையாது உலகு" என்பதை அறிந்தே 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தில், முதல் குறளில் மழையை 'அமிழ்தம்' என்று போற்றினார். பத்தாவது குறளில், 'மழையில்லாமல் போனால் மக்கள் வாழ்க்கையே இல்லை' என்று சொன்னார். மழையின்றி மக்களுக்கு ஒழுக்கம் கூட அமையாது என்றும் கூறுகின்றார்.

**நீரின்றி அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு** (குறள்: 20)

நிலத்தினை இயற்கை தந்த கொடை என்று பொருளியலார் கூறுவது போன்றே, கடவுள் கொடுத்த வரமானது வற்றாது உயிர் ஊட்டும் பான்மையது என்பதனைக் குறிக்கவே, திருவள்ளுவர் வானை 'அமிர்தம்' என்று போற்றிப் புகழ்கின்றார்.

இதற்கு முக்கியத்துவம் அளித்து நீர்மேலாண்மைச் சிறப்புகளை உருவாக்கினார்கள். அவைகளாவன:-

- ✓ அகழி (கோட்டையின் முன் அமைக்கபடும் நீர் அரண்)
- ✓ அருவி (மலையில் இருந்து வரும் நீர்)
- ✓ ஆறு (அருவியில் இருந்து பெருகி ஓடும் நதி )
- ✓ இளசை (நீர் தேக்கம் )
- ✓ ஊருணி (குடிநீர் மக்கள் பயன்பாட்டிற்கு உள்ளது)
- ✓ உறைகிணறு (மணற்பாங்கான இடத்தில் உள்ள குடிநீர்)
- ✓ குளம் (வழிபாட்டுதளங்களில் உள்ளது)
- ✓ கண்மாய், குட்டை, ஓடை, சேங்கை (உழவுத்தொழில் மற்றும் கால்நடைகளின் பயன்பாட்டிற்கு உள்ளவை)

இந்நுட்பத்தினை,

**அறையும் பொறையு மணந்த தலைய**
**எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரை**
**தெள்நீர்ச் சிறுகுளம்** (புறம்: 118-1-3)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

மேலும், ஓடிவரும் மழைநீரினைத் தேக்கிவைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்த அறையும், பொறையும் அமைந்த பகுதிகளை இணைத்து வளைந்த வடிவிலான நீர்நிலைகள் கட்டப்பட்டன. இப்பாடலில் நீர் வெளியேறும் வழிகளுடன் கூடிய அணைக்கட்டுப் பகுதியும் காட்சியும் விளக்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு அமைப்புகளில் தண்ணீரை சேமித்து பல தலைமுறைகள் கடந்தும் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் நம் மன்னர்கள்.

**இயக்குவித்தல்**

மேலாண்மை முயற்சிகள் அனைத்தும், இயக்கமான நீரின் பயன்பாட்டை அனைவரும் நன்கு அறிய, நீரைத் தன் வாழ்வியலின் அங்கமாகக் கொண்டு, அவற்றின் முக்கியத்துவத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்தவர்கள் நம் முன்னோர்கள். தன் வீடு தேடிவரும் விருந்தினரையும் உபசரிக்க முதலில் நீர் கொடுத்து தன் உறவை வலு சேர்க்கும் அன்பின் அடையாளமாக நீரை

உருவாக்கப்படுத்தினார்கள். ஊரின் ஒற்றுமையை பறைசாற்ற ஊரணிகள் அமைத்து, தன் குலம் காக்க குளம் அமைத்து, உழவு செய்ய மற்றும் உயிரினங்கள் உயிர் வாழ, தன் கண்களின் இமையாய் கண்மாய் அமைத்து நீரின் அவசியத்தை உலகு அறியச் செய்தனர் என்றால் அது மிகையாகாது.

**கட்டுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்**

மேலாண்மை சிந்தனையில் கட்டுப்படுத்துதல் என்பது திட்டமிடுதலின் நோக்கத்தையும் செயல்முறைகளையும் ஒருங்கிணைக்கும் பணியாகக் கருதப்படும். மேலும் நீர் மேலாண்மைப் பணி என்பது நான்கு புறமும் சுவர்களால் மட்டும் அல்லாமல் தொழில்நுட்பத்தின் நுணுக்கமாய் அமைக்கப்பட்டதாகும். அதாவது மழைக் காலங்களில் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து வரும் வரத்து, கால்வாய் மூலம் மக்கள் வசிக்கும் நகரின் மையப்பகுதியில் அமைந்த குளத்திற்குள் வந்து சேர வழிகள் அமைக்கப்பட்டு, பின்பு உபரி நீர் ஊரணிகளில் நிரப்பப்பட்டு, பின்பு கண்மாய் மதகு வழியாக ஆற்றில் சேர்க்கும் வழிகளை நிரந்தரமாக அமைக்க திட்டமிட்டு, அத்தனை வழிகளையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தனர் நம் முன்னோர் என்றால் அது மிகையாகாது.

**நிறைவுரை**

நீர் மேலாண்மையை பொறுத்தவரை, நீர்த் தேக்கங்கள் பல அமைத்து, அதனை ஆண்டு முழுவதும் பராமரித்து, உலக உயிரினங்களின் தேவைகளை பூர்த்தி செய்து, தலைமுறைகள் பல கடந்தும் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் நம் முன்னோர்கள். “நீர்அகம் பொருந்திய ஊர்அகத்திரு” (கொன்றைவேந்தன்) - நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும் என்கிற அவ்வையார் வரிகளை, இன்றைய தலைமுறைக்கு கற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே உண்மை. தன் நலன் மட்டும் கருதாமல், சமூக சூழியல் நலன் காக்கவும் அன்று பாடுபட்ட நம் முன்னோர்களைப் பின்பற்றாமல், நாம் இன்று நவீன நாகரிக தலைமுறையில், தண்ணீரை விலை கொடுத்து வாங்கவும், இதனை சந்தைப்படுத்தி வியாபாரம் செய்யும் அவலநிலையிலும் தான் வாழ்ந்து வருகிறோம். இன்றைய நிலை இதுவென்றால் நாளைய நிலை? என்பது ஒரு போராட்டம். நாம் இன்றே இதற்கான ஒரு நல்ல தீர்வை விதைக்க வேண்டும். இல்லையெனில் நாளைய தலைமுறை நம்மைப் பழிக்கும் என்பதே உண்மை.

**அடிக்குறிப்புகள்**

1. குறள். 517
2. அகம்: 42-911
3. குறள். 16
4. குறள். 11
5. குறள். 20
6. புறம்: 118-1-3

**உதவிய நூல்கள்**


1. திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை.
2. துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு, புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18. (1947)
3. வேங்கடசாமி நாட்டார் ந.மு, வேங்கடாசலம் பிள்ளை. ரா, அகநானூறு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
4. Tripathi & reddy, Principles of Management, Tata McGraw-Hill Publishing Company Limited, New Delhi,2008.
5. www.விக்கிபீடியா.
6. www.valaitamil.com/tamil-language
7. www.google.com

சிறப்பிதழ்
**Special Issue**

**14-15 பங்குனி 2051**
**27th & 28th March, 2020**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 1. | மு. பக்கீர் இஸ்மாயில் & எஸ். முஹம்மது ஜஹீத் | வரலாறுகளில் வாழும் தமிழர்களின் வாழ்வியல் : நீர் மேலாண்மை - ஒரு ஆய்வுப் பார்வை | 1-4 |
| 2. | க.உமாராணி | தொல்காப்பியத்தில் திணை ஒழுக்கமும் இயற்கைச் சூழலும் | 5-9 |
| 3. | சே.செந்தமிழ்ப்பாவை | இன்றைய ஒலி மாசுபாட்டிற்குச் சங்க இலக்கியம் சுட்டும் தீர்வு | 10-14 |
| 4. | கா.கணநாதன் & மு.சிவசுப்பிரமணியன் | சிலப்பதிகாரம் காட்டும் நிலம்சார் சூழலியல் பதிவுகள் | 15-19 |
| 5. | கா.கணநாதன் & மு.சிவசுப்பிரமணியன் | தமிழரின் திணை நிலை வாழ்க்கையில் சூழலியல் சார்பதிவுகள் | 20-23 |
| 6. | கா.கணநாதன் & மு.சிவசுப்பிரமணியன் | புறநானூற்றில் பொறியியல் திறன்கள் | 24-27 |
| 7. | கா.கணநாதன் & மு.சிவசுப்பிரமணியன் | முக்கூடற்பள்ளு வழி மரபுசார் வேளாண்மை | 28-32 |
| 8. | மோ. விஜய் | குறுந்தொகையில் நீர் | 33-40 |
| 9. | ப.கவிதா | சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் - ஓர் வரலாற்று ஆய்வு | 41-47 |
| 10. | ச.சிவசங்கரி | தமிழரின் திணைநிலை வாழ்க்கையில் சூழலியல் சார் பதிவுகளில் விலங்குகள் | 48-51 |
| 11. | மா.முத்துராமன் | நற்றிணையில் தமிழர் பண்பாட்டு மரபுகள் | 52-55 |
| 12. | மு.மரகதவல்லி | கோள்நிலை திரிந்து.... | 56-60 |
| 13. | சி. ஜெயவீரகாந்தி | வரலாற்றுப்பார்வையில் சுற்றுச்சூழல் மாசடைவதற்கான காரணங்களும் விளைவுகளும் மற்றும் தீர்வுகளும் - ஓர் ஆய்வு | 61-64 |
| 14. | சு.அரவிந்த் | சூழல் அறம் கட்டுரைத் தொகுப்பு உணர்த்தும் நீரின் நிலை | 65-71 |
| 15. | அ.பாரதிராணி | சிலம்பில் இயற்கைக் கூறுகள் | 72-76 |
| 16. | ச.ஜோஸ்பின் அருள்ஜோதி & அ.பாரதிராணி | ஐந்திணை எழுபதில் நீர் நிலைகள் | 77-80 |
| 17. | ஜெ.பிருந்தாஸ்ரீ | சூழலியல் நோக்கில் கார் நாற்பது | 81-85 |
| 18. | பெ.பகவத்கீதா | ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளில் இயற்கையின் இருத்தலும் மனித நம்பிக்கையின் மீட்டெடுப்பும் | 86-89 |
| 19. | இரா.இரவிக்குமார் & மு.சுதா | சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல்சார் பதிவுகள் | 90-95 |
| 20. | சி.பரமேஸ்வரி | நடுகல் வழிபாடு | 96-101 |
| 21. | அ.கமலம் | தற்காலக் கவிதைகளில் வெளிப்படும் கடந்தகால நினைவுகளும் நிகழ்கால நனவுகளும் | 102-108 |
| 22. | வெ.சத்ய நாராயணன் | தமிழ் இலக்கியங்களில் வற்கடம் | 109-115 |
| 23. | அ.கோமதி & பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர் | சங்க இலக்கியங்கள் காட்டும் காடுகளின் அழிவுச்சூழல் | 116-119 |
| 24. | மு.சுப்புலெட்சுமி & பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர் | சூழலியல் நோக்கில் ஐங்குறுநூற்று ஊரன் | 120-123 |
| 25. | இரா.சுதமதி | காடு நாடாதலும்... நாடு காடாதலும்...! | 124-127 |
| 26. | ஆ. விஜயலட்சுமி | பரிபாடலில் புனல் | 128-131 |
| 27. | பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர் | குறிஞ்சிக்கலி முன்னிறுத்தும் இயற்கை வருணனை | 132-134 |
| 28. | பா.காசிவைரவன் & போ.மாரிச்சாமி | தமிழ் இலக்கியம் காட்டும் நீர்மேலாண்மையும் இன்றைய கால சூழலும் | 135-138 |
| 29. | சொ.மெ. அழகப்பன் | இயற்கை விவசாயம் | 139-143 |
| 30. | காசிசீர் நா.ரா.கி. காளைராசன் | திருவிளையாடற் புராணத்தில் கடல்கோள் பதிவுகள் | 144-149 |
| 31. | ப.உதயகணேசன் & செ.தினேஷ் | சூழலியல் மாறுபாட்டால் அறிவுசார் திறனில் பரிணாம வளர்ச்சியடைந்த தொன்மைத் தமிழினம் | 150-155 |
| 32. | பா.சண்முகபிரியா & பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர் | ஆற்றுப்படை இலக்கியங்களில் சூழலியல் நோக்கில் பண்பாடு | 156-160 |
| 33. | பா.ஜெயகுமாரி & பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர் | சங்க இலக்கியச் சூழ்நிலையில் இறைசிந்தனை | 161-165 |
| 34. | நா.தனலெட்சுமி & சே.செந்தமிழ்ப்பாவை | சுற்றுச்சூழல் மாசுபாடும் - தீர்வும் | 166-171 |
| 35. | ஆறு. சரவணகுமார் | கொரோனா ஊரடங்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் | 172-178 |
| 36. | சத்தியசீலன்.க, விஜயன்.சி, பாலமுருகன்.சி & தினேஷ்.செ, உதயகணேசன்.ப | வைகை ஆற்றின் புவிசார் தொல்லியல் முக்கியத்துவம் | 179-183 |
| 37. | மா. சிதம்பரம் | இலக்கியங்களில் இளவேனில் | 184-190 |
| 38. | மா. சிதம்பரம் | பருவநிலை மாறுபாடும் பல்லுயிர் நிலைப்பாடும் | 191-195 |
| 39. | மா. சிதம்பரம் | தமிழ் இலக்கியங்களில் வற்கடப் பதிவும் வளம் சுரந்த நிகழ்வும் | 196-201 |
| 40. | க. இராசாராம் | கார்காலச் செம்புற மூதாய் | 202-205 |
| 41. | ப.சி.குருசண்முகாம்பாள் | தமிழரின் இயற்கை நலன் போற்றிய வேளாண்மை மரபு | 206-209 |
| 42. | பெரி.அழகம்மை | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இயற்கைச் சூழல் | 210-213 |
| 43. | இரா. கீதா | ஐந்திணைகளில் இயற்கைக்காட்சி | 214-217 |
| 44. | S. Renukadevi | பேரழிவு மேலாண்மையும் சமுதாயப் பிரச்சனைகளும் | 218-221 |
| 45. | V. ROJA | இயற்கைப் பேரழிவுகளும் மீட்டெடுப்பும் | 222-228 |
| 46. | சொ. அருணன் | புறநானூறு உணர்த்தும் சூழலியல் பதிவுகள் | 229-234 |
| 47. | நா.முத்துக்குமரன் | பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பண்பாட்டுக் கூறுகள் | 235-238 |
| 48. | R.S. சாந்தி | தமிழரின் தொன்மை வாழ்வியலில் இயற்கை வழிபாடும் சுற்றுசூழல் விழிப்புணர்வும் | 239-244 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121